HMOP. No.150/2024

சார்பு நீதிமன்றம், விருதுநகர்

நாள் –20.02.2026

ம.சா.2– முருகேசன் த/பெ –முத்தையா

**<u>சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1) இம்மனுவின் மனுதாரர் மாரீஸ்வரி எனது உடன் பிறந்த சகோதரி என்றால் சரிதான். நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விபரங்கள் எனக்கு தெரியும். அதை நான் படித்து பார்த்து தான் கையொப்பம் போட்டேன். திருமணத்திற்கு ரூ.3 லட்சம் செலவு செய்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. திருமணத்திற்கு எதிர்மனுதாரர் வீட்டில் செலவு செய்தார்கள் என்றால் சரியல்ல. திருமணத்திற்கு நாங்கள் செலவு செய்திருந்தால் அதற்கான ஆவணம் தாக்கல் செய்திருப்போம் என்றால் சரியல்ல. திருமண செலவிற்கான ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை. எதிர்மனுதாரர் காலாண்டர் கம்பெனியில் வேலை பார்த்து மாதம் ரூ.30,000/– சம்பளம் வாங்குவதாக கூறியுள்ளது பொய் என்றால் சரியல்ல. நான் சொல்வது உண்மையாக இருப்பினும் அதற்கான ஆவணம் தாக்கல் செய்திருப்பேன் என்றால் சரியல்ல.

2) எதிர்மனுதாரருக்கும் எனது சகோதரிக்கும் திருமணம் ஆன நாள் முதல் பிரச்சனை இருந்து வந்தது என்றால் சரியல்ல. மேற்படி பிரச்சனை குறித்து எதிர்மனுதாரர் என்னிடம் சொன்ன போதும் நான் மனுதாரரை கண்டிக்கவில்லை என்றால் சரியல்ல. திருமணத்திற்கு பின்னர் மனுதாரருக்கும், எதிர்மனுதாருக்கும் எந்தவித தாம்பத்ய உறவும் இல்லை என்றால் சரியல்ல. எனது நிரூபண வாக்குமூலம் பாரா–4 ல் கூறியுள்ள விபரங்கள் பொய் என்றால் சரியல்ல. எனது சகோதரி அடிக்கடி சண்டை

போட்டு கணவரிடம் சொல்லாமல் எனது வீட்டிற்கு வந்துவிடுவார் என்றால் சரியல்ல.

3) எனது சகோதரி கணவருக்கு செய்ய வேண்டிய எந்த பணியும் மனைவி என்ற முறையில் செய்யவில்லை என்றால் சரியல்ல. மனுதாரர் எதிர்மனுதாரர் மீது அடிக்கடி காவல்நிலையத்தில் புகார் கொடுத்து துன்புறுத்தி வந்தார் என்றால் சரியல்ல. எனது செல்வாக்கை பயன்படுத்தி நானும், எனது சகோதரியும் சேர்ந்து காவல்நிலையத்தில் வைத்து எதிர்மனுதாரரை மிரட்டி எல்லா பொருட்களையும் கொடுத்துவிட்டார் என்றும், ஸ்ரீவில்லிபுத்தூர், குடும்ப நல நீதிமன்றத்தில் விவாகரத்து வழக்கை நாங்கள் வாபஸ் பெற்று கொள்வதாக சொன்னோம் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் அதனை நம்பி காவல்நிலையத்தில் வைத்து எழுதப்படாத வெள்ளை பேப்பரில் கையெழுத்து போட்டார் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் இருசக்கர வாகனம் வாங்கி தருமாறு என்னிடம் கேட்கவில்லை என்றால் சரியல்ல. எனது தங்கைக்கு மாதவிடாய் தள்ளி சென்ற சமயம் வேண்டும் என்றே எதிர்மனுதாரர் சீனியை தண்ணீரில் கலந்து கொடுத்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. குழந்தை இல்லை என்பதால் இவ்வாறு பொய்யான சங்கதியை சொல்கிறேன் என்றால் சரியல்ல. மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.